## ஞாலகுருவின் படைப்புக்கள்

# "இந்து வேத மதம் புரிந்திட வாரீர்!"

இந்துவேதம் ஒரு பெரிய ஆலமரம்.
மற்ற மதங்கள் இந்த ஆலமரத்தின் இலைகளாக,
கிளைகளாக, விழுதுகளாகத்தான் தோன்றின, தோன்றின,
தோன்றின. எனவே, மற்ற மதங்கள் மீது வெறுப்பொ,
பகையோ கிடையாது.
எதிர்ப்போ, மறுப்போ கிடையாது.



அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.


**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 தை மாதம்

**43,73,125ஆம் வருடத்தின் தை மாத வெளியீடு.**

# உள்ளுறை

1. **“இந்துவேத மதம் புரிந்திட வாரீர்!”** - இந்துவேத மதமே உலக மூல மதம் என்பதை விளக்கி குருதேவர் அவர்கள் அருளிய இந்துவேத மதக் கருத்துக்கள்.
2. **“பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் குருவாக்கியங்களில் சில...”** - முந்தைய இதழின் இறுதியில் வழங்கப்பட்டதன் மீதிப்பகுதி.
3. **“இந்துவேதத்தில் பெண்கள்”** - பெண்களைப் பற்றி இந்துவேதம் கூறும் செய்திகளாக குருதேவர் அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் வழங்குவது.
4. **“அருளாட்சிக்கு அழைப்பு”** - ஒலிப்பேழையில் குருதேவர் ஆணை பெற்று படிக்கப்பட்ட அறிவிக்கையின் எழுத்தாக்கம்.

# இந்து வேத மதம் புரிந்திட வாரீர்!

## இந்துவேத மதமே உலக மூல மதம்.

## இந்துவேத மதக் கருத்துக்கள்.

### அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் அருளுபவை.

அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், இந்து வேத நாயகம், இந்து வேத பீடம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீட பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம், ஆதி அனாதி கடந்த தம்பிரான் சாமிகள்.

1. அண்டபேரண்டங்களின் இயக்கங்களால் விளையும் ஐம்பூதச் சேர்க்கைகளால் உலகங்கள் தோன்றுவதும், சிதைவதும் நிகழ்கின்றன.
2. ஐம்பூதச் சேர்க்கை விதிகளால் இயல்பாகப் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றுவது போலவே; அருவ, அருவுருவ, உருவ அருவ, உருவக் கடவுள்கள் தோன்றுகின்றன.
3. பயிரினங்களும், உயிரினங்களும் உலகெங்கும் தோன்றுவது போலவே; பல்வேறு வகையான வண்ணங்களையும், வடிவமைப்புக்களையும் உடைய மானுடர்களும் தோன்றினர்கள்.
4. உலகின் ஆரம்பத்தில் பயிரினங்களும், உயிரினங்களும், மானுட இனங்களும் ஐம்பூதச் சேர்க்கை விதிகளால் பிறப்பெடுத்திடும்படி செய்திட்ட தட்ப வெப்ப இயற்கைச் சூழல்கள் அப்பொழுதே

மாறிவிட்டதால் புதிதாகப் பயிரினங்களோ, உயிரினங்களோ, மானுட இனங்களோ தோன்றுவதில்லை, தோன்ற இயலவில்லை.

5. அண்டபேரண்டங்களுக்கும் இந்த உலகுக்கும் உள்ள தொடர்புகளால் தோன்றக் கூடிய கடவுள்கள் தொடர்ந்து என்றென்றைக்கும் 1. திருக்கல், 2. தருக்கல், 3. கருக்கல், 4. குருக்கல் என்று நான்கு வகையினராகத் தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள்.

6. இவ்வுலகில் தோன்றக் கூடிய திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் என்ற நான்கு வகைப்பட்ட கடவுள்களிலும்; அருவ வடிவினர், அருவுருவ வடிவினர், உருவஅருவ வடிவினர், உருவ வடிவினர் என்ற நான்கு வகையினரும் தொடர்ந்து தோன்றிக் கொண்டே இருக்கின்றார்கள்; தோன்றி கொண்டே இருப்பார்கள்.

7. கடவுள்கள் கோடான கோடிக்கணக்கில் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள், தோன்றிக் கொண்டே இருப்பார்கள்.

8. கடவுள்கள் பிறந்து கொண்டும் இருக்கிறார்கள், இறந்து கொண்டும் இருக்கிறார்கள், பிறப்பிறப்பற்ற பெருநிலை பெற்றுக் கொண்டும் இருக்கிறார்கள்.

9. கடவுள்கள் அதிக அளவில் தோன்றியது இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டமே.

10. கடவுள்கள் அதிகமாகத் தோன்றிய குமரிக் கண்டம் கடலுள் மூழ்கிய காலத்து மிஞ்சிய மிகப் பெரிய நிலப்பரப்பான தமிழகம்தான் இன்றைய, இவ்வுலகத்தின் கடவுள்களின் பிறப்பிடம், காப்பிடம், வாழ்விடம், தாய்வீடு, கருவறை, தங்குமிடம் ஆகும்.

11. கடவுள்கள் கணக்கற்று வாழ்கின்ற நாடே தமிழகம்.

12. கடவுள்களைச் சந்திக்கின்ற மனிதர்களும், மனிதர்களைச் சந்திக்கின்ற கடவுள்களும் கணக்கற்று வாழ்ந்த இடம், வாழுகின்ற இடம், வாழப் போகின்ற இடம் தமிழகம் ஒன்று மட்டும்தான்.

13. கடவுள்களுக்கு என்று நாற்பத்தெட்டு வகையான கருவறைகள், நாற்பத்தெட்டு வகையான வெட்டவெளிக் கருவறைகள், நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையக் கருவறைகள், நாற்பத்தெட்டு வகையான கோயில் மூலக் கருவறைகள் என்று நூற்றித் தொண்ணூற்றிரண்டு (192) வகைப்பட்ட வாழ்விடங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும்தான் கடவுள்களைப் பற்றித் தெரியும்! தெரியும்!! தெரியும்!!! புரியும்! புரியும்!! புரியும்!!!

14. இந்துவேதமும், இந்துமதமும்தான் கடவுள்களாலேயே அருளப்பட்டும், கடவுள்களாலேயே செப்பனிட்டு காக்கப்பட்டும் வருகின்றன.

15. கடவுள்கள் இந்த உலகம் முழுவதும் தோன்றக் கூடிய பயிரினங்களும், உயிரினங்களும் உய்வதற்காக வழங்கிய உலகப் பொது வேதமே இந்து வேதம்; உலகப் பொது மதமே இந்து மதம்.

16. இந்த மண்ணுலகில் தோன்றக் கூடிய அனைத்து வகையான வேதங்களும், மதங்களும்; கடவுள்களே அருளிய இந்துவேதம், இந்துமதம் என்பனவற்றின் கூறுகளாகவோ, அல்லது அங்கங்களாகவோ அல்லது திரிபுகளாகவோதான் இருக்க முடியும்.

17. கடவுள்கள் இம்மண்ணுலகில் உருவாக்கிய இந்துவேதத்தின் செயல்வடிவான இந்துமதம் எனும் கனிமலர்ச் சோலையிலே மலர்ந்த மலராகவோ, காய்த்துக் கனிந்த கனியாகவோதான் உலக அருளாளர்கள் இருக்க வேண்டும்.

18. இந்து வேத மதமான இந்துமதமெனும் ஆலமரத்தின் இலையாகவோ, கிளையாகவோ, விழுதாகவோ, மலராகவோ, கனியாகவோ, வித்தாகவோதான் வேதங்களும், வேதமதங்களும் தோன்ற முடியும்.
19. தமிழகமே அருட்பயிரின நாற்றங்காலாக, விதைப் பண்ணையாக, நாற்றுப் பண்ணையாக என்றென்றும் விளங்குகிறது, விளங்க முடியும்.
20. அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியே பத்தி சத்தி சித்தி முத்தி எனும் நான்குக்கும் உரியது.
21. அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களுடைய நேரடி வாரிசுகளான தமிழர்களே அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள், நாயகங்கள், வித்துக்கள், சொத்துக்கள் ஆவார்கள்.
22. அருளை மருந்தாகவும், விருந்தாகவும் விளைவித்துத் தரும் ஆற்றல் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிக்கும், செந்தமிழர்களுக்கும், செந்தமிழகத்துக்குமே உண்டு! உண்டு!! உண்டு!!!
23. இம்மண்ணுலகில் தொன்மையான கடவுள்களுக்கும், அண்டபேரண்டத்தவர்களுக்கும் தெரிந்த ஒரே ஒரு மொழி, அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியேயாகும்.
24. வடகோடி இமயத்தின் முடி முதல் தென்கோடி கன்னியாகுமரிக் கடலடி வரை உள்ள அனைத்து கடவுள்களுக்கும் தெரிந்த ஒரே ஒரு மொழி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியேயாகும்.
25. இந்த உலகில் உள்ள அனைத்து வகைப்பட்ட கோயில்களிலும் உள்ள நூற்றியெட்டு வகை (108) திருப்பதிச் சக்கரங்களும், இருநூற்று நாற்பத்து மூன்று (243) வகைச் சத்திபீடச் சக்கரங்களும்,

ஆயிரத்தெட்டு (1008) வகைச் சீவாலயச் சக்கரங்களும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் எழுதப்பட்டவை! எழுதப்பட்டவை!! எழுதப்பட்டவை!!!

26. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் எழுதப்பட்ட முன்னூற்றி தொண்ணூற்ரூறு (396) இந்துவேத நூல்களும், முப்பத்தாறு (36) இந்துமத நூல்களும் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும் உருவாக்கித் தரமுடியும், தரமுடியும், தரமுடியும்.

27. தமிழ்மொழியின் தாழ்ச்சியே அருளுலகத் தாழ்ச்சி!

28. தமிழரின் வீழ்ச்சியே அருளுலகின் வீழ்ச்சி!

29. அண்டபேரண்ட இயக்க விதிகளின்படி ஒரு மொழிக்குரிய கடவுள்கள் அம்மொழியினருக்கு மட்டுமே உதவுவார்கள்.

30. அண்டபேரண்ட இயக்க விதிகளின்படி ஓர் இனத்துக்குரிய கடவுள்கள் அந்த இனத்தவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள்.

31. அண்டபேரண்ட இயக்க விதிகளின்படி ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள் அந்நாட்டவர்களுக்கு மட்டுமே உதவுவார்கள்.

32. அண்டபேரண்ட இயக்க விதிகளின்படி திருக்கல் எனும் கடவுள்களுக்கு மட்டுமே அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி நன்ருகத் தெரியும். மற்றபடி இம்மண்ணுலகின் பல பாகங்களில் தோன்றக் கூடிய தருக்கல், கருக்கல், குருக்கல் எனும் மூன்று வகைக் கடவுள்களுக்கும் அவரவர்கள் தோன்றக் கூடிய வட்டார மொழிகளே தெரியும்! தெரியும்!! தெரியும்!!!

33. கடவுள் என்ற ஒருவர் இல்லை, கடவுள்கள் என்று கோடிக்கணக்கில் உண்டு.

34. கடவுள்களுக்கு வாழ்வியல் விருப்பு வெறுப்புக்கள் உண்டு, தனிப்பட்ட சொந்த நெறிமுறைகளும், வாழ்வியல்களும் உண்டு.

35. மனிதர்களைச் சந்திக்க வராத கடவுள்களோ அல்லது மனிதர்களால் சந்திக்க முடியாத கடவுள்களோ இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!!!!.... இருக்க முடியாது! இருக்க முடியாது!! இருக்க முடியாது!!! இருக்கவே முடியாது!!!! என்ற மிகத் தெளிவான முடிவான கருத்தைக் கூறுவது இந்துவேதம். இக் கருத்து விளக்கச் செயல்வடிவம்தான் இந்துமதம். இந்த இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும் விழியாக! வழியாக! வழிகாட்டியாக! வழித்துணையாக! வழிப்பயனாக இருப்பவர்கள்தான் பதினெண்சித்தர் பீடாதிபதிகள், பதினெண்சித்தர்கள், நாற்பத்தெட்டு வகைச் சித்தர்கள்.

36. பதினெண்சித்தர்கள் கற்கோயில்களையும், சொற்கோயில்களையும் அருளுலகின் இரு கண்களாக அருளியிருக்கிறார்கள். எனவே, கண்ணிருந்தும் குருடராகி விடாதீர்கள்!

37. பதினெண்சித்தர்கள் இந்துவேதத்திலும், இந்துமதத்திலும் வகுத்தளித்துள்ள அருவ வழிபாடு, அருவுருவ வழிபாடு, உருவஅருவ வழிபாடு, உருவ வழிபாடு எனும் நான்கு வகைப்பட்ட வழிபாடுகள்தான் அருளுலகின் முழுமையான பேருண்மை நிலை. எனவே, அவரவர் விருப்பம் போல், இந்த நான்கு வகை வழிபாடுகளில் எந்த ஒரு வழிபாட்டு முறையையோ, அல்லது எத்தனை வழிபாட்டு முறைகளையோ ஏற்றுப் போற்றிப் பயன்படுத்தி உய்வு பெறுவீர்! உய்வு பெறுவீர்!! உய்வு பெறுவீர்!!! மானுடரே.

38. பதினெண்சித்தர்கள் ‘எச்செயலையும் செய்யாது நீள்தவத்தில் ஆழ்ந்திடும் திருவழிப் பூசைமுறை’, ‘உலகில் கிடைக்கக் கூடிய பயிரினங்களை சமைக்காமலும், சமைத்தும் படையலிட்டுப் பூசைசெய்யும் தருவழிப் பூசைமுறை’, ‘உலகில் கிடைக்கக் கூடிய

உண்ணுவதற்குரிய உயிரினங்களை சமைக்காமலும், சமைத்தும் படையலிட்டுப் பூசை செய்யும் கருவழிப் பூசைமுறை', 'குருவே எல்லாம் என்று குருவுக்குள் தன்னையும், தனக்குள் குருவையும் உணர்ந்து குருவுக்கு அணுக்கத் தொண்டு புரிவதையே பூசையாகச் செய்யும் குருவழிப் பூசைமுறை' என்ற நான்கு வகைப்பட்ட பூசைமுறைகளை வழங்கி இருக்கிறார்கள். இதைப் புரிந்து அவரவர் விருப்பு, வெறுப்பு, வசதி வாய்ப்புக்களுக்கு ஏற்ப பூசைசெய்து உய்வு பெறுவீராகுக!

39. பதினெண்சித்தர்கள் அருளியுள்ள இந்துவேதமும், இந்துமதமும் அச்சுறுத்தியோ, இச்சகம் பேசியோ; வேதத்தையோ, மதத்தையோ பரப்பாதே! பரப்பாதே!! பரப்பாதே!!! என்று மிகத் தெளிவாக விளக்குகின்றன.

40. பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும் மிகத் தெளிவாக ஒவ்வொரு மனிதனும் தான் பிறக்கின்ற நாட்டுக்குரிய மொழியையும், மதத்தையும் இரு விழிகளாகக் கொண்டு வாழ்ந்தால் போதும், போதும், போதும் என்று விளக்குகின்றன.

41. பதினெண்சித்தர்கள் படைத்துள்ள கணக்கற்ற பலவகையான கண்கவர் கோயில்களும், வெவ்வேறான வடிவமைப்புடைய கடவுள்களின் திருவுருவங்களும், திருப்பெயர்களும், வாழ்வியல் நிகழ்ச்சி விளக்க வரலாறுகளும் இருக்கின்ற காலத்திலேயே கடவுளைக் காண முடியாது, கடவுள் எங்கோ இருக்கிறார் என்ற கருத்துக்கள் தோன்றுவது ஏன்? தோற்றுவித்தவர் யார்? தொடர்ந்து பரப்புவது எதற்காக? என்ற வினாக்களின் விடையே இந்துவேதமும், இந்துமதமும் ஆகும்.

42. பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும்தான் மனிதர்களில்

(அ) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட அருளாளர்கள்,

(ஆ) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட அருளாளிகள்,

(இ) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட அருளாடு நாயகங்கள்,

(ஈ) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட மருளாளர்கள்,

(உ) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட மருளாளிகள்,

(ஊ) நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட மருளாடு நாயகங்கள்

என்று ஆறுவகைப்பட்ட அருளாளர்கள் காலங்கள் தோறும் தோன்றும்படி செய்திருக்கின்றன, செய்து வருகின்றன, செய்து வரும்.

43. பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும்தான் இந்த மண்ணுலகில் உள்ள பயிரினங்களின் வாழ்வும், உயிரினங்களின் வாழ்வும் இந்த மண்ணுலகோடு தொடர்புடைய நாள்களாலும், கோள்களாலும், மீன்களாலும், இராசிகளாலும் இயக்கப்படுகின்றன, வளர்க்கப்படுகின்றன, காக்கப்படுகின்றன, முடிவும் விடிவும் அளிக்கப்படுகின்றன என்ற பேருண்மையை விளக்குகின்றன.

44. பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும்தான் முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு எனும் மூன்றையும் விளக்கி உரைத்து மானுட வாழ்விற்குப் பேருதவி புரிகின்றன.

45. பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும்தான் மனித வாழ்வில் ஏற்படக் கூடிய கறை குறைகள், அழிவு இழிவுகள், சிதைவு சீரழிவுகள், சிறுமை வறுமைகள், பழி பாவங்கள், நலிவு மெலிவுகள், அடக்க முடக்கங்கள், தேக்க வீக்கங்கள், ஒடுக்க நடுக்கங்கள், நோய் நொடிகள் முதலிய அனைத்திற்கும் (1) காற்று, (2) கருப்பு (3) பேய் (4) பிசாசு (5) பில்லி (6) சூனியம் (7) ஏவல் (8) செய்வினை (9) வைப்பு (10) கழிப்பு (11) மருந்து (12) கண்ணேறு எனும் பன்னிரண்டு வகை தாக்குதல்களே காரணம் என்று மிகத் தெளிவாகக் காரணம் காட்டியும்; அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகளைக் கூறியும்; இவ்வுலகின் தூய்மையான, மெய்யான, வாய்மையான வேதமாகவும் மதமாகவும் விளங்குகின்றன.

46. பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும்தான் காலத்தின் தேவைக்கேற்ப பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் ஆகிய நான்கினையும் முறைப்படித் தோற்றுவித்து (1) மடாதிபதி, (2) பீடாதிபதி, (3) ஆதீனம், (4) தம்பிரான், (5) பண்டாரம், (7) பண்டார சந்நதி, (8) பண்டார சந்நிதி, (9) அரியவாள், (10) கூரியவாள், (11) சீரியவாள், (12) பெரியவாள், (13) நேரியவாள், (14) வீரியவாள், (15) ஏமகோடி பீடம், (16) காமகோடி பீடம் (17) சோமகோடிப் பீடம், (18) வாமகோடி பீடம், ... என்று 48 வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களைத் தோற்றுவித்து அருளுலகப் பொருளுலக இருளகற்றும் செயல்திட்டத்தை அருளியுள்ளன, அருளியுள்ளன, அருளியுள்ளன.

47. பதினெண்சித்தர்களின் இந்துவேதமும், இந்துமதமும் மிகத் தெளிவாக, விளக்கமாக, நேரடியாக கடவுள்களில் உள்ள ஆண்கள், பெண்கள், அலியினர் என்கின்ற மூன்று வகையினருமே மெய்யான பத்தியாளர்களுக்கு தாயாக, தந்தையாக, அண்ணாவாக, தம்பியாக, அக்காவாக, காதலனாக, காதலியாக, நண்பனாக, தோழனாக, தோழியாக, தொண்டனாக, சேவகனாக, காவலனாக, எடுபிடிகளாக, ... நேரில் தோன்றி உற்ற துணையாக இருந்து உதவி செய்தார்கள், செய்கிறார்கள், செய்வார்கள் என்று உறுதிமொழி கூறுகிறது, உறுதிமொழி கூறுகிறது, உறுதிமொழி கூறுகிறது.

48. பதினெண்சித்தர்களின் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் தலைவராக, ஞானத்தந்தையாக, குவலய குருபீடமாக, தலைமை ஆச்சாரியாராக, அருள்வழங்கு அருட்கொடை வள்ளலாக, கருவறை மூலவர்களின் அம்மையப்பராக, பரப்பிறம்மமாக, நான்குயுக நாயகமாக, தத்துவ நாயகமாக தோன்றக் கூடிய பதினெண்சித்தர் பீடாதிபதி, கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், ஆதி அனாதி கடந்த தம்பிரான் சாமி, அந்தணர்

அண்ணல், ஞானச்சாரியார் மட்டுமே, “வாருங்கள் மானுடரே! உங்களைக் கடவுளாக்குகிறோம்”, “வாருங்கள் மானுடரே! உங்களுடைய பழம்பிறப்புக்களையும், மறுபிறப்புக்களையும் உணர்த்துகிறோம்!”, “வாருங்கள் மானுடரே! பிறப்புக்கும், இறப்புக்கும் பொருள் அறிய வைக்கிறோம்!”, “வாருங்கள் மானுடரே! கடவுளர் உலகை ஞானக்காட்சியில் காட்டுகிறோம்”, “வாருங்கள் மானுடரே! சித்துக்கள் அனைத்தையும் தனித்தனி கடந்த தத்துவாதீதப் பெருநிலை உய்விக்கச் செய்வோம்”, “வாருங்கள் மானுடரே! ஆவி, ஆன்மா, ஆருயிர் கலந்த சீவநிலையைத் துய்த்து உய்வடையச் செய்வோம்” ... என்று அறிவிப்புக்களை வழங்கி; அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல அருளாளர்களை உருவாக்கி அருட்பெருஞ்சோதி காத்திட வழிவகுத்திருக்கிறார்.

விரிவஞ்சி இந்த நாற்பத்தெட்டு (48) கருத்துக்களோடு ஈண்டு இப்பட்டியலை நிறைவு செய்கிறோம். தற்காலிகமாக அன்புகூர்ந்து இதனைப் பிழைகள் இல்லாமல் முடிந்தால் நாற்பத்தெட்டையும் ஒட்டுமொத்தமாக தனி நகலாக வெளியிடுங்கள்.

**<u>தலைப்பு</u>:-** “இந்து வேதமதம் புரிந்திட வாரீர்” அல்லது “இந்துவேத மதமே உலக மூலமதம்”.

**<u>அருளுபவர்</u>:-** அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம், வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53.

**வெளியிடுவது:**

இந்து மறுமலர்ச்சி இயக்கம்.
இந்து முன்னேற்றக் கழகம்.
தென்மண்டலம்.

என்று குறிப்பிடுங்கள்.

(முன்பு போல் cyclostyle செய்ய முடிந்தாலும் செய்து அனுப்புங்கள். வெளியீட்டில் தாத்தாவின் கோபுரத்தோடு சேர்ந்த படத்தை அட்டையில் அச்சடியுங்கள்)

**சிறப்புக் குறிப்பு:-**

இதை உடனே திருவருட் செல்வர் வெங்கடாசலம் அவர்களிடம் படித்துக் காட்டி தனி நூலாக அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்யுங்கள். இவற்றிலுள்ள கருத்துரைகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து விருப்பம் போல் வீடு தோறும் வழங்கும் அறிக்கைகளேயும், நாளேடு விளம்பரங்களேயும், திரையரங்கு விளம்பரங்களேயும், சுவரொட்டி விளம்பரங்களேயும் செய்திடுங்கள், செய்திடுங்கள், செய்திடுங்கள். யாவும் வெற்றியாகட்டும், நலமாகட்டும்.

நாளே நமதே! வெற்றி நமதே!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்.

**//உண்மை நகல்//**

# பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் குருபாரம்பரிய வாசகங்களில் சில... (தொடர்ச்சி)

(6) "... புத்தரும், மகாவீரரும், கபாலிகரும், பைரவரும், காலாமுகப் பைரவரும், சாத்தரும், ... எதிர்த்த அல்லது எதிர்த்துப் போரிட்ட பொய்யான, போலியான, பயனில்லாத கற்பனுவாதங்கள் மிக்க அறியாமைகளும், புரியாமைகளும் மிகுந்த ஹிந்துமதம் எப்படி மெய்யான பயன்மிக்க அனைத்து வகைப்பட்ட சத்தி, சித்தி, முத்திகளைத் தரவல்ல இந்துமதத்தை வெல்ல முடிந்தது? இதற்குக் காரணம் தமிழர்களுடைய ஏமாளிப் போக்கா! கோமாளிப் போக்கா! அப்பாவிப் போக்கா! அறியாமைப் போக்கா! வெகுளிப் போக்கா! தான்தோன்றிப் போக்கா! வறட்டுத்தனமான வம்பு வீம்புப் போக்கா! ... என்பது புரியவில்லை, புரியவில்லை, புரியவில்லை. அதாவது, தமிழர்கள் தங்களுடைய உயிர்போன்ற தமிழையும், விழிகள் போன்ற இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் பிறர் சிதைத்துச் சீரழிக்கும்படி விட்டு விட்டார்களே என்று எண்ணும் போது தமிழர் என்ற ஓர் இனமே இல்லாமல் போய்விடும்!; தமிழ்மொழி என்ற ஒரு மொழியே இல்லாமல் போய்விடும்!; தமிழ்நாடு என்ற ஒரு நாடே இல்லாமல் போய்விடும்! ... என்றுதான் தொலைநோக்கோடு கூற வேண்டியிருக்கிறது, தொலைநோக்கோடு கூற வேண்டியிருக்கிறது, தொலைநோக்கோடு கூற வேண்டியிருக்கிறது.

(7) "... எப்படியெல்லாமோ சிந்தித்துப் பார்க்கிறோம். நூற்றுக்கும் மேற்பட்ட அழகிய இனிய தமிழ்ச் சொற்களால் பொருள் விளக்கங்கள் தரப்படுகின்ற பொருளாழமிக்க தூய உயர்தனிச் செந்தமிழ்ச் சொல்லான இந்து என்ற சொல்லை குமரி முதல் இமயம் வரை உள்ள இந்துக்கள் எப்படி மறந்தார்கள்? அல்லது எவ்வாறு மறக்கடிக்கப் பட்டார்கள்? அல்லது ஏன் மறந்தார்கள்? என்ற வினவிற்கு விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவேயில்லை.

இதேநேரத்தில் எவ்விதப் பொருளுமே இல்லாத 'ஹிந்து' என்ற ஓர் அந்நிய மொழிச் சொல்லை குமரி முதல் இமயம் வரையுள்ள இந்துக்கள் எப்படி ஏற்றுக் கொண்டார்கள்? அல்லது எவ்வாறு ஏற்றுக் கொள்ளும்படிச் செய்யப்பட்டார்கள்? அல்லது ஏன் ஏற்றுக் கொண்டார்கள்? என்ற வினவிற்கும் விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவில்லை, விடை கிடைக்கவேயில்லை...."

(8) "... இந்தக் கலியுகம் பிறந்து சுமார் 1500 ஆண்டுகளுக்குள் (கி.மு. 1500 வரை) தோன்றிய எந்த ஏடுகளிலும் இந்த 'ஹிந்து' என்ற சொல் காணப்படவில்லை. இதேபோல், யாம் செயல்படத் துவங்குவதற்கு சுமார் 500 ஆண்டுகளுக்குள் (கி.மு.500க்கு மேல்) எந்த ஏடுகளிலும் 'இந்து' என்ற சொல் அதிகமாக ஆட்சியில் இல்லை. அதாவது 'ஹிந்து' என்ற சொல் அதிகமாக ஆட்சியிலும், 'இந்து' என்ற சொல் சிலசில இடங்களில் ஆட்சியிலும் காணப்படும் நிலை வந்துவிட்டது. எனவே, இந்த 'ஹிந்து' என்ற அந்நிய மொழிச் சொல் வெகு விரிவாகவும், விரைவாகவும் செயல்பட்டே இந்த 'இந்து' என்ற அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்ச் சொல்லை ஏட்டுலகிலிருந்தும், நாட்டு நடப்பிலிருந்தும் விரட்டி விரட்டி விலகி ஓடச் செய்து விட்டது, விரட்டி விரட்டி விலகி ஓடச் செய்துவிட்டது, விரட்டி விரட்டி விலகி ஓடச் செய்து விட்டது.

அதாவது, 'ஹிந்து' என்ற சொல்லுக்குரிய அந்நியர்கள் இந்த 'ஹிந்து' என்ற சொல்லையே ஒரு பெரிய படையாகக் கொண்டு ஏட்டுலகிலும், நாட்டு நடப்பிலும் மிகப் பெரிய போர்களைத் தொடர்ந்து நடத்தி; இப்போர்களில் பெற்ற வெற்றிகளின் மூலம் இந்த 'இந்து' என்ற சொல்லுக்குரிய தமிழர்களை விரட்டி விரட்டி துரத்தி துரத்தி அடிஅடியென்று அடித்து அச்சமும், கூச்சமும், கோழைப்பண்பும், தன்மானமில்லாத அடிமை மனமும் உடையவர்களாக ஆக்கினர் என்பதே உண்மை.

இதனால்தான், தமிழர்கள் மீண்டும் இந்த 'இந்து' என்ற அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்ச் சொல்லின் அழகையும், பொருளாழத்தையும், எளிமையையும், தெளிவையும், வலிமையையும், பொலிவையும், தன்மானம் காக்கக் கூடிய ஆற்றலையும், இன உரிமையுணர்வை ஊட்டும் வளத்தையும், மதத் தத்துவச் செழிப்பையும், ஆட்சியையும், மாட்சிமை பெறச் செய்யும் சூழ்ச்சித் திறனையும், தமிழின மொழி நாட்டு வரலாறுகளை விளக்கும் சத்தியினையும் உணர்ந்து மீண்டும் 'இந்து' என்ற சொல்லைத் தங்களுடைய ஏட்டுலகிலும், நாட்டு நடப்பிலும் மாட்சிமிக்க ஆட்சி பெறச் செய்யும் விழிச்சிமிகு எழிச்சி நிலையை உருவாக்கும் பணியினைத் துவக்கினோம் யாம்.

இதற்காகவே, 48 ஓலைகள் முதல் 108 ஓலைகள் வரையுள்ள **'குறிப்பேடுகள்'** எனும் பெயரில் நூற்றுக்கணக்கான நூல்களை இந்து மதத்துக்கும், ஹிந்து மதத்துக்கும் உள்ள வேற்றுமைகளை விளக்கிக் காட்டுவதற்காக எழுதி ஒவ்வொரு குறிப்பேட்டையும், ஆயிரக்கணக்கில் நகலெடுக்கச் செய்து நாடு முழுதும் அனுப்பும் பணியினைத் துவக்கினோம் யாம். இருந்த போதிலும், எமது முயற்சிகள் சித்திரை மாதத்தில் கொதிக்கும் பாலை நிலத்து மணலில் பாலை ஊற்றிய கதையாக இந்துக்களிடத்தில், குறிப்பாக இந்துமதத்தின் மூலவர்களாகவும்,

காவலர்களாகவும், வாரிசுகளாகவும், கருவூலங்களாகவும், விதைப் பண்ணைகளாகவும், நாற்றங்கால்களாகவும் இருக்கின்ற நமது தமிழர்களிடம் எவ்விதமான பயனும் ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவேயில்லை.

எனவேதான், அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல அனைத்து வகைப்பட்ட அருளாளர்களும், அருளாளிகளும், அருளாடு நாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடு நாயகங்களும் தமிழினத்தில் தோன்றித் தோன்றி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் அருள்மழை பொழியட்டும், அருள்மழை பொழியட்டும், அருள்மழை பொழியட்டும் என்பதற்குரிய ஏற்பாடுகளை தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் விரிவாகச் செய்து செல்லுகிறோம் யாம்..."

(9) "... இந்த 'இந்து' என்ற சொல்லின் பொருளும், வரலாறும், வாழ்வியல்களும், பூசைமொழிகளும், பூசைவிதிகளும், தத்துவங்களும், செயல்சித்தாந்தங்களும், அருளுலகப் பொருளுலகச் செயல் வீரர்களும், போதனைகளும், சாதனைகளும்தான் தமிழனை விழிச்சியுற்று, எழிச்சி பெற்று, உரிய பயிற்சிகளைச் செய்து, பெரிய பெரிய முயற்சிகளை மேற்கொண்டு, செழிச்சி நிறை ஆட்சிமீட்சி பெறச் செய்திடும், செழிச்சி நிறை ஆட்சிமீட்சி பெறச் செய்திடும், செழிச்சி நிறை ஆட்சிமீட்சி பெறச் செய்திடும் என்ற இந்த மாபெரும் பேருண்மையினைத் தமிழர்களுக்குப் புரியவைக்கும் முயற்சியில் ஈடுபடக் கூடிய மனிதர்கள் செய்யக்கூடிய எல்லாவகையான தவறுகளும், கடுமையான பாவங்களும் முழுமையாக மன்னிக்கப்பட்டு வீடுபேறு வழங்கப்படும், விருப்பமான பேரின்பங்கள் சித்தித்திடும் என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம், அருளாணை வழங்குகிறோம். இந்த அருளாணை அண்டபேரண்டங்கள் முழுவதும் நீண்டு நின்று நிலவிடும்.

எனவேதான்,

‘தமிழனைத் தமிழனாக்குவதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தமிழ்மொழிப் பற்றினை உண்டாக்குவதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தன்மான உணர்வினைத் தோற்றுவிப்பதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தன்னம்பிக்கையூட்டுவதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தன் இனமான உணர்வினை ஊக்குவிப்பதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு இனப்பற்றினை விளைவிப்பதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு இன ஒற்றுமையுணர்வை உண்டாக்குவதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு இன உரிமையுணர்வை ஊற்றெடுக்கும்படிச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தனது தமிழ்மொழியே விழி என்ற அறிவை வளர்ப்பதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தானே அருளுலகின் மூலவன், முதல்வன், வாரிசு என்ற பேருண்மையை விளங்கிக் கொள்ளச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தமிழே கடவுள், தெய்வம், தேவதை, இறை, எல்லா என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்குத் தமிழ்மொழியே அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி என்ற பேருண்மையைப் புரியும்படிச் செய்வதே சிறந்த தவம்’,

'தமிழனுக்குத் தமிழ்மொழிதான் அருளை அநுபவப் பொருளாக ஊற்றெடுக்கச் செய்யும் அமுதமொழி என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்குத் தமிழ்மொழியே அண்டபேரண்டங்களை இம்மண்ணுலகப் பிண்டங்களோடு இணைக்கும் பேராற்றலுடைய அருள்மொழி என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்குத் தமிழ்மொழியே அனைத்து வகைப்பட்ட கடவுள்களையும் நேரில் வரவழைக்கும் ஆற்றலுடைய அருளுலக ஆட்சிமொழி என்ற பேருண்மையைப் புரிய வைப்பதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு அனைத்து வகைப்பட்ட மனிதர்களையும் விருப்பம்போல் எந்தக் கடவுளாகவும் மாற்றித் தரும் வல்லமை தமிழ்மொழிக்கே உண்டு என்ற பேருண்மையைப் புரிய வைப்பதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு கடவுளை மனிதனாக வரவழைக்கும் அருளாற்றலுடைய ஒரேமொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு மனிதனைக் கடவுளாக்கும் பூசைமொழியினையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு நாற்பத்தெட்டுவகைப்பட்ட கடவுள்களையுடைய ஒரே ஒரு மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்களையுடைய ஒரே ஒரு மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு கடவுளர்களின் விருப்பங்களுக்கேற்ற 48 வகைப்பட்ட கருவறைகளையும், 48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகளையும்,

48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகளையும், 48 வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகளையும் தோற்றுவிக்கின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு அருவக் கடவுள்களையும், அருவுருவக் கடவுள்களையும், உருவ அருவக் கடவுள்களையும், உருவக் கடவுள்களையும் தோற்றுவிக்கின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு திருக்கல் எனும் கடவுள்களையும், தருக்கல் எனும் கடவுள்களையும், கருக்கல் எனும் கடவுள்களையும், குருக்கல் எனும் கடவுள்களையும் உருவாக்குகின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு நூற்றெட்டு வகைப்பட்ட திருப்பதி சக்கரங்களும், 243 சத்தி பீடச் சக்கரங்களும், 1008 வகைப்பட்ட சீவாலயச் சக்கரங்களும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்படும் அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள் என்ற ஆறுவகைப்பட்ட திருவருட் செல்வர்களையும் தோற்றுவிக்கின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் எனும் அருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

‘தமிழனுக்கு நவநாதங்கள், பதினெண்சித்தங்கள், 36 ஓதங்கள், 96 போதங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கக் கூடிய ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு நான் சுருதிகள், நான் ஆரணங்கள், நான் ஆகமங்கள், நான் மீமாம்சைகள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு நேமங்கள், இணை நேமங்கள், துணை நேமங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு நியமங்கள், இணை நியமங்கள், துணை நியமங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு நிடதங்கள், இணை நிடதங்கள், துணை நிடதங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு நிட்டைகள், இணை நிட்டைகள், துணை நிட்டைகள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்’,

‘தமிழனுக்கு நீதிகள், இணை நீதிகள், துணை நீதிகள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி

தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு அத்தரங்கள், அத்திரங்கள், அத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு சாத்தரங்கள், சாத்திரங்கள், சாத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு சூத்தரங்கள், சூத்திரங்கள், சூத்திறங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு தோத்தரங்கள், தோத்திரங்கள், தோத்திறங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு நேத்தரங்கள், நேத்திரங்கள், நேத்திறங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதுதான் சிறந்த தவம்',

'தமிழனுக்கு வேத்தரங்கள், வேத்திரங்கள், வேத்திறங்கள் எனும் திருவருட் செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு கருவாக்குகள், கருவாக்கியங்கள், கருவாசகங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு குருவாக்குகள், குருவாக்கியங்கள், குருவாசகங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு தருவாக்குகள், தருவாக்கியங்கள், தருவாசகங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு திருவாக்குகள், திருவாக்கியங்கள், திருவாசகங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு அருள்வாக்குகள், அருள்வாக்கியங்கள், அருள்வாசகங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு மருள்வாக்குகள், மருள்வாக்கியங்கள், மருள்வாசகங்கள் எனும் திருவருட்செல்வங்கள் இருக்கின்ற ஒரே ஓர் அருள்மொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு ஆதகர், ஈதகர், ஏதகர், ஓதகர் எனும் அருட் கலைஞர்களை உருவாக்குகின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஒருமொழி

தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

'தமிழனுக்கு கோதகர், சாதகர், போதகர், வாதகர் எனும் அருளுலக ஊழியக் காரர்களை உருவாக்குகின்ற அருட்பேராற்றலையுடைய ஒரே ஒருமொழி தமிழ்மொழிதான் என்ற பேருண்மையை விளங்கிடச் செய்வதே சிறந்த தவம்',

... முதலிய குருவாசகங்களை கணக்கற்று எல்லாக் குறிப்பேடுகளிலும், குருபாரம்பரியத்திலும் எழுதிச் செல்லுகிறோம் யாம். இவற்றின் மூலமாவது கணக்கற்றோரின் முயற்சியால் என்றாவது ஒருநாள் தமிழன் தமிழனாக்கப்படுவான். அப்படி, தமிழன் தமிழனாக்கப்பட்ட பிறகுதான் இந்துவேதம் வளவளர்ச்சியையும், ஆட்சிமீட்சியையும் பெற்றிடும். அதையொட்டியே, இந்துமதம் மறுமலர்ச்சி பெற்றிடும், ஆட்சிமீட்சி பெற்றிடும். எனவே குமரி முதல் இமயம் வரையுள்ள இந்துக்களில் பல்வேறு மொழியினர்களும், பல்வேறு இனத்தவர்களும் இருந்தபோதிலும் எல்லா இந்துக்களும் புரிந்து கொள்ளக் கூடிய சில குருவாக்கியங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

# குருவாக்கியங்கள்

1. தமிழனின் தாழ்ச்சிநிலைகள் போக்கப்பட்டால்தான் இந்துமதத்தின் தாழ்ச்சி நிலைகள் போக்கப்பட்டிடும்.
2. தமிழனின் வீழ்ச்சி நிலைகள் அகற்றப்பட்டிட்டால்தான் இந்துமதத்தின் வீழ்ச்சி நிலைகள் அகற்றப்பட்டிடும்.
3. தமிழனின் இகழ்ச்சி நிலைகள் நீக்கப்பட்டிட்டால்தான் இந்துமதத்தின் இகழ்ச்சி நிலைகள் நீக்கப்பட்டிடும்.
4. தமிழனின் அடிமைநிலைகளும், மிடிமை நிலைகளும், அழிக்கப்பட்டிட்டால்தான் இந்துமதத்தின் அடிமைநிலைகளும், மிடிமைநிலைகளும் அழிக்கப்பட்டிடும்.

5. தமிழனுடைய தாழ்வு மனப்பான்மை ஒழிக்கப்பட்டிட்டால்தான் இந்துமதத்தின் தாழ்வுநிலைகள் ஒழிக்கப்பட்டிடும்.
6. தமிழன் உரிமை பெற்றிட்டால்தான் இந்துமதம் உரிமை பெறும்.
7. தமிழன் பெருமை பெற்றிட்டால்தான் இந்துமதம் பெருமை பெறும்.
8. தமிழன் வளம் பெற்றிட்டால்தான் இந்துமதம் வளம் பெறும்.
9. தமிழன் வலிமை பெற்றிட்டால்தான் இந்துமதம் வலிமை பெறும்.
10. தமிழன் பொலிவு பெற்றிட்டால்தான் இந்துமதம் பொலிவு பெறும்.
11. தமிழன் ஆட்சி பெற்றிட்டால்தான் இந்துமதம் ஆட்சி பெறும்.
12. தமிழன் மாட்சி பெற்றிட்டால்தான் இந்துமதம் மாட்சி பெறும்.
13. தமிழனின் விழிச்சியே இந்துமத விழிச்சி.
14. தமிழனின் எழிச்சியே இந்துமத எழிச்சி.
15. தமிழனின் முயற்சியே இந்துமத முயற்சி.
16. தமிழனின் உயர்ச்சியே இந்துமத உயர்ச்சி.
17. தமிழனின் மலர்ச்சியே இந்துமத மலர்ச்சி.
18. தமிழனின் வளவளர்ச்சியே இந்துமத வளவளர்ச்சி.
19. தமிழனின் ஆட்சியே இந்துமத ஆட்சி.
20. தமிழனின் மாட்சியே இந்துமத மாட்சி.
21. தமிழ்மொழியின் எழுத்துக்களே இந்துவேதத்தின் உயிரோட்டங்கள்.
22. தமிழ்மொழியின் எழுத்து வகைகளே இந்துவேதக் கடவுள்களின் வகைகள்.
23. தமிழ்மொழியின் சொற்களே இந்துவேதத்தின் பூசைமொழிகள்.
24. தமிழ்மொழியின் சொற்றொடர்களே இந்துவேத விளக்கங்கள்.
25. தமிழில் பேசுவதே இந்துவேதத்தை ஓதுவதாகும்.

26. தமிழின் வளவாழ்வே இந்துவேதத்தின் வளவாழ்வு.
27. தமிழின் உரிமை வாழ்வே இந்துவேதத்தின் உரிமை வாழ்வு.
28. தமிழின் விழிச்சியே இந்துவேதத்தின் விழிச்சி.
29. தமிழின் எழிச்சியே இந்துவேதத்தின் எழிச்சி.
30. தமிழின் வளர்ச்சியே இந்துவேதத்தின் வளர்ச்சி.
31. தமிழின் மறுமலர்ச்சியே இந்துவேதத்தின் மறுமலர்ச்சி.
32. தமிழின் உயர்ச்சியே இந்துவேதத்தின் உயர்ச்சி.
33. தமிழின் பயிற்சியே இந்துவேதத்தின் பயிற்சி.
34. தமிழின் செழிச்சியே இந்துவேதத்தின் செழிச்சி.
35. தமிழின் ஆட்சியே இந்துவேதத்தின் ஆட்சி.
36. தமிழின் வாழ்வே இந்துவேத வாழ்வு.
37. தமிழின் வரலாறே இந்துவேத வரலாறு.
38. தமிழ்மொழிச் செல்வங்களே இந்துவேதச் செல்வங்கள்.
39. தமிழே இந்துவேத வழி.
40. தமிழே இந்துவேத வழிகாட்டி.
41. தமிழே இந்துவேத வழித்துணை.
42. தமிழே இந்துவேத வழிப்பயன்

... முதலிய குருவாக்கியங்களாவது தமிழ்மொழிக்கும் இந்து-வேதத்துக்குமுள்ள இணைப்பையும், பிணைப்பையும் தமிழர்களுக்காவது உணர்த்தட்டும், உணர்த்தட்டும், உணர்த்தட்டும் என்ற அறிவிப்பை வழங்கியே இந்துமதம் எப்படியாவது என்றைக்காவது ஹிந்துமதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப் படுவதற்குரிய பணிகளைத் தொடருகிறோம் இந்துமதத் தந்தையாகிய யாம்!!!...”

இப்படிப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை எடுத்து எழுதி இந்த "இந்து வேதம், இந்து மதம் பிழைக்க, தழைக்க, உழைக்க, அழைக்கிறோம் வாரீர்! வாரீர்!! வாரீர்!!! என்ற தலைப்பில் எழுதப்படும் கட்டுரை நூலின் இரண்டாம் பகுதியை நிறைவு செய்கிறோம், **இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி, இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடமான ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், இந்துவேதபீடம்.**

*18/12/91இல் தொடங்கி 19/12/91இல் நிறைவு பெற்றது.*

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல் சித்தரடியான் திரு சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து வேதத்தில் பெண்கள்

## அருளியவர்: அந்தணர் அண்ணல்

தெய்வீகப் பெண்களின் ஒன்பது பருவங்கள்; அதாவது, பெண்களாகப் பிறந்தவர்களில் தெய்வீக ஆற்றல் உடையவர்கள் இந்துவேதத்தில், 1. மகள், 2. வாலை, 3. பிறவிடை, 4. கன்னி, 5. தருணி, 6. நங்கை, 7. குமரி, 8. பெண் (பெண்டு, பொம்பளை) 9. விருத்தை (வீழி) என்று ஒன்பது பருவத்தினராகப் பிரிக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் பொருளுலக வாழ்வில் ஈடுபட்டால் சிறக்க மாட்டார்கள். அதாவது, பிறப்பியல் (சாதகம்), வரியியல் (கைரேகை), அங்கவியல் (உறுப்பிலக்கணம்), பெயரியல், மனையியல் எனும் ஐந்தர, ஐந்திர, ஐந்திற கலைகளால் பெண்களைக் கணித்து அவர்கள் அருளுலக வாழ்க்கைக்குரியவர்களா? பொருளுலக வாழ்க்கைக்குரியவர்களா? என்று முடிவு செய்ய வேண்டும்.

அதன்மூலம், அருளுலக வாழ்க்கைக்குரிய பெண்கள் முழுநேர அருளுலக வாழ்க்கை வாழ வேண்டும்; அல்லது அருளுலக வாழ்க்கையில் ஆர்வமுள்ள ஆண்களை மட்டுமே தேர்ந்தெடுத்து கணவராக்கிக் கொண்டு வாழ வேண்டும். அப்பொழுதுதான், இவர்களது வாழ்க்கை சிறக்கும், இன்பமாக இருக்கும், அமைதியாக இருக்கும், நிம்மதியாக இருக்கும், நிறைவான வாழ்க்கை வாழ்நாள் முழுவதும் கிடைக்கும், இயற்கையான இறப்பு கிடைக்கும். இல்லையேல், இப்பெண்களுக்கு வாழ்க்கை சிறக்காது, இன்பமாக இருக்காது, அமைதியாக இருக்காது, நிம்மதியாக இருக்காது, நிறைவான வாழ்க்கை வாழ்நாள் முழுதும் கிடைக்காது, இயற்கையான இறப்பு கிடைக்காது.

உலகியலான அல்லது பொருளியலான பெண்கள் மட்டும் 1. ஐந்து வயது முதல் ஏழு வயது வரை உள்ள பெண்கள் பேதை எனவும், 2. எட்டு வயது முதல் பதினொன்று வயது வரை உள்ள பெண்கள் பெதும்பை எனவும், 3. பன்னிரண்டு வயது முதல் பதின்மூன்று வயது வரை உள்ள பெண்கள் மங்கை எனவும், 4. பதினான்கு வயது முதல் பத்தொன்பது வயது வரை உள்ள பெண்கள் மடந்தை எனவும், 5. இருபது வயது முதல் இருபத்தைந்து வயது வரை உள்ள பெண்கள் அறிவை எனவும், 6. இருபத்தாறு வயது முதல் முப்பத்தொன்று வயது வரை உள்ள பெண்கள் தெரிவை எனவும், 7. முப்பத்திரண்டு வயது முதல் நாற்பது வயது வரை உள்ள பெண்கள் பேரிளம்பெண் எனவும் ஏழு பருவத்தினராக பட்டியலிட்டுக் காட்டப்படுகிறார்கள்.

இப்படி, பெண்களில் அருளுலகத்திற்குரிய பெண்கள் என்றும், பொருளுலகத்துக்குரிய பெண்கள் என்றும் இரண்டு வகையாக வேறுபடுத்தி பிரித்துக் காட்டப்படுவதுதான் இந்துவேதத்தின் தனிச் சிறப்பாகும். இந்தப் பொருளுலகத்துப் பெண்களை அருளுலகத்திற்குப் பயன்படுத்தினால்; அதாவது, இந்த பொருளுலகப் பெண்கள் அருளுலகத்துக்குரிய ஆண்களை; அதாவது, அருளுலக ஆர்வமும் விருப்பமும் ஈடுபாடும் உடைய ஆண்களை மணந்து கணவனாக்கிக் கொண்டு வாழ்ந்திட்டால் வாழ்க்கை 1. சிறக்காது. 2. இன்பமாக இருக்காது, 3. அமைதியாக இருக்காது, 4. நிம்மதியாக இருக்காது, 5. நிறைவான வாழ்க்கை வாழ்நாள் முழுவதும் கிடைக்காது, 6. இயற்கையான இறப்பு கிடைக்காது ..... என்று பொருளுலகப் பெண்களைப் பற்றிய நுட்பதிட்ப ஒட்பமான கருத்தினை விளக்குவதுதான் இந்துவேதத்தின் சிறப்பு.

**குறிப்பு:** இப்படி அருளுலகப் பெண்கள், பொருளுலகப் பெண்கள் என்ற இரு வேறு வகைப் பெண்களை பற்றிய விளக்கம் இருக்கு வேதத்தில் விளக்கப்படுகிறது.

ஆனால், இந்த இரு வகைப்பட்ட பெண்களையும் எப்படிப் பயன்படுத்திக் கொள்வது; அதாவது அருளியலாகவும் சரி, பொருளியலாகவும் சரி - இந்த இரு வகைப் பெண்களும் உலகியல் வாழ்க்கை வாழுவதில் அருளுலகத்தாரோடும், பொருளுலகத்தாரோடும் கலந்து வாழ நேரிடுவதால் இவ்விரு வகைப்பட்ட பெண்களைப் பற்றி அசுர வேதத்தில் (யசுர்) பெண்களும், மந்தரமும், மந்திரமும், மந்திறமும், மாந்தரமும், மாந்தரீகமும் தொடர்புபடுத்தப்பட்டு கருத்து விளக்கங்கள் வழங்கப்படுகின்றன; யாம வேதத்தில் (சாம வேதத்தில்) பெண்களும், தந்தரமும், தந்திரமும், தந்திறமும், தாந்தரமும், தாந்தரீகமும் தொடர்புபடுத்தப்பட்டு கருத்து விளக்கங்கள் வழங்கப்படுகின்றன; அதர்வான வேதத்தில் (அதர்வன வேதத்தில்) எந்தரமும், எந்திரமும், எந்திறமும், ஏந்தரமும், ஏந்தரீகமும் தொடர்புபடுத்தப்பட்டு கருத்து விளக்கங்கள் வழங்கப்படுகின்றன.

இவைதான் இந்துவேதத்தின் தனிப்பட்ட சிறப்பாகும்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல் சித்தரடியான் திரு சீ. மணி (வேம்படிதாளம்) அவர்களின் கையெழுத்தில் கிடைத்திட்டது.//**

# அருளாட்சிக்கு அழைப்பு

தமிழர்களின் இந்துவேதத்தில் மட்டுமே உள்ள மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழியைப் பயன்படுத்தி உய்வடைய வாரீர்! தமிழ் மந்திரங்களின் மூலம் கடவுள்கள் வாழுகின்ற கோயில்களைப் பாதுகாத்துப் பயன்படுத்திடக் கற்றிட வாரீர்! அருளுலக ஐயங்கள் அனைத்திற்கும் விஞ்ஞான நோக்கிலும், பகுத்தறிவுப் போக்கிலும் விளக்கங்கள் பெற்றிட வாரீர்! முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு பற்றிய இரகசியங்களை அறிந்து விதியை வென்றிட, வீடுபேறு பெற்றிட வாரீர்! ஓகாசனம், யோகாசனம், குண்டலினி, தவம், பூசை முதலியவற்றை அவரவர் யோகப்படி கற்று அருட்செல்வராகிட வாரீர்! நவீன மருத்துவத்தால் நலமாகாத உடல் நோய்களையும், உயிர் நோய்களையும் குணப் படுத்திக் கொள்ள வாரீர்! நாள், கோள், மீன், நாக தோசம், செவ்வாய் தோசம் முதலிய பாதிப்புக்களை நீக்கும் பரிகார முறைகளைக் கற்றிட வாரீர்! குருகுலங்கள் அமைத்து சாகாக்கல்வி கற்பித்திடலாம் வாரீர்! இந்துக்களே! தமிழர்களே! உங்களுடைய குருவை, ஆச்சாரியாரை, பாரம்பரியத் தலைவரை புரிந்து அருளாட்சி அமைத்திட வாரீர்! வாரீர்! வாரீர்!

**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,**
**இந்து முன்னேற்றக் கழகம்.**
**வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53.**

//உண்மை நகல்//
//இதன் மூலநகல்: ஒலிப்பேழையிலிருந்து எழுதப்பட்டது.//



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **குருமகாசன்னிதானம்**, ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

“புத்தரும், மகாவீரரும், கபாலிகரும், பைரவரும், காலாமுகப் பைரவரும், சாத்தரும், ... எதிர்த்த அல்லது எதிர்த்துப் போரிட்ட பொய்யான, போலியான, பயனில்லாத கற்பனுவாதங்கள் மிக்க அறியாமைகளும், புரியாமைகளும் மிகுந்த ஹிந்துமதம் எப்படி மெய்யான பயன்மிக்க அனைத்து வகைப்பட்ட சத்தி, சித்தி, முத்திகளைத் தரவல்ல இந்துமதத்தை வெல்ல முடிந்தது?”

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-